அனுப்புநர்
முனைவர்.ச.கண்ணப்பன்,
இயக்குநர்,
பள்ளிக் கல்வி இயக்ககம்,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
சென்னை–06.

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டங்கள்.

ந.க.எண் : 062956/எம்2/இ3/2024 நாள்:01.04.2025

பொருள்: பள்ளிக் கல்வி இயக்ககம் – ஃப்ரி மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை – மாணவர்களின் விவரங்களை EMIS வலைதளத்தில் சரிபார்த்தல் – சார்பாக

பார்வை: சென்னை–09, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளரின் கடித எண்.977/ADW.3/2025-1, நாள்.26.03.2025

--------------

பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தேர்வுகள் நடத்தி முடிக்கப்பட்ட பின்னர் ஒரு வார காலத்திற்குள் மாணவர்களின் தகவல்களை EMIS வலைதளத்தில் தேவை எனில் உரிய விவரங்களை சரிசெய்து அந்தந்தப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்திட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும், வகுப்பு 8, 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் விவரங்களை "Student Profile" update சரியாக உள்ளதை அந்தந்த வகுப்பாசிரியர் உறுதி செய்து கொள்ளவும் அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு இவ்வலுவலகத்தினால் அனுப்பப்பட்ட ஆணையின் நகலை உடன் அனுப்பிடவும் தெரிவிக்கப்படுகிறது.

இயக்குநர்
2/3

1/4/25

நகல்

1. அரசு செயலாளர், பள்ளிக்கல்வித் துறை, தலைமை செயலகம், சென்னை -09.
2. அரசு செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தலைமை செயலகம், சென்னை -09.
3. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்கம், சென்னை-06.
4. உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு மாதிரிப்பள்ளிகள், சென்னை-06.
5. இயக்குநர், தொடக்க கல்வி இயக்ககம், சென்னை-06.
6. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை-06.

SCAN AnyScanner